
# மாங்கனி
# சிறுவர் பாடல்கள்



செல்லையா குமாரசாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கனி
# சிறுவர் பாடல்கள்

**செல்லையா - குமாரசாமி**

வெளியீடு:
வெளியீட்டுப்பிரிவு
நிலா பதிப்பகம்
இராஜவீதி, கோப்பாய்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | மாங்கனி (சிறுவர் பாடல்கள்) |
| ஆசிரியர் | : | செல்லையா - குமாரசாமி |
| கணனி வடிவமைப்பு | : | ஸ்கைலைன்ஸ் - கரவெட்டி |
| முதற்பதிப்பு | : | 2009 ஆவணி |
| வெளியீடு | : | நிலா பதிப்பகம்<br>வெளியீட்டுப்பிரிவு<br>இராஜவீதி, கோப்பாய்<br>(கல்வியியற் கல்லூரி அருகாமை)<br>யாழ்ப்பாணம். |
| உரிமை | : | திருமதி.பரமேஸ்வரி குமாரசாமி |
| பக்கங்கள் | : | v +67 |
| விலை | : | 150 /= |

| | | |
|---|---|---|
| Title of the book | : | Mankani -Siruvar Padalkal |
| Editor | : | Sellaiya Kumarasamy |
| Computer plan | : | Skylines. Karaveddy. |
| Publisher | : | Nilaa Printers<br>Rajaveethy, Kopay. Jaffna. |
| Copyright | : | Mrs.Parameshwary Kumarasamy |
| Pages | : | v + 67 |
| Price | : | 150/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



என் அருமைத் தங்கை

அமரர் சோமசுந்தரம் இராசம்மா

அவர்களுக்கு

'மாங்கனி' கவிதை நூல்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம |
|---|---|
| 1. பள்ளிக்கு நேரம் ஆகுது | 1 |
| 2. அம்மாக்கள் | 3 |
| 3. பூமி பிறந்தது | 5 |
| 4. முதன்மைகள் | 8 |
| 5. வெற்றிக் கொடி நாட்டு | 12 |
| 6. உற்பத்தியில் முதலிடம் | 14 |
| 7. உண்ணும் நீர் | 15 |
| 8. தேடு கிடைக்கும் | 17 |
| 9. ஆற்றல் உண்டு உன்னிடம் | 19 |
| 10. சிரித்து வாழ்வோம் | 21 |
| 11. இளமைக்கல்வி | 23 |
| 12. குறள் படிப்போம் | 25 |
| 13. கடைப்பிடிக்க வேண்டியவை | 27 |
| 14. ஓடி விளையாடுவோம் | 29 |
| 15. இன்றைய வேலையை இன்றே முடிப்போம் | 31 |
| 16. கொஞ்சம் கேளுங்கள் | 33 |
| 17. பேராசை | 35 |
| 18. நாரை பேசுகிறது | 37 |
| 19. காக்கைக்கு நன்றி | 39 |
| 20. பொங்கல் வருகுது | 41 |
| 21. வீசும் காற்றே | 44 |
| 22. சத்தியம் | 47 |
| 23. கிளிப்பிள்ளை | 50 |
| 24. எறும்பு போல.... | 52 |
| 25. அன்பின் பெருமை | 54 |
| 26. பெற்றோரைக் காப்போம் | 56 |
| 27. அகந்தை | 58 |
| 28. மாங்கனி | 60 |
| 29. ஆபத்து வேளையில் | 63 |
| 30. பெரிதும் சிறிதும் | 65 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழிலே குழந்தை இலக்கியம் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியரிடமே முதன்முதலிலே காண்கிறோம். நாட்டார் இலக்கிய மரபுவழி முகிழ்த்த குழந்தை இலக்கியம்பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டாரா? அல்லது செந்நெறி இலக்கியமரபுவழி முகிழ்த்த குழந்தை இலக்கியம் பற்றிக் குறிப்பிட்டாரா என்பது பற்றி இன்னும் தெளிவாக ஆராயப்படவில்லை.

நாட்டார் இலக்கியமரபிலே குழந்தை இலக்கியம் மிகவும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஔவையார் முதலியோர் 'அருளிச்' செய்த குழந்தை இலக்கியங்கள் எமது கல்வி மரபிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நீதி போதிக்கும் பாங்குடைய இவ்விலக்கியங்கள் ஆரோக்கியமானதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற அவாவின் வெளிப்பாடே எனலாம்.

ஈழத்துக் குழந்தைப்பாடல் மரபுக்கு நீண்டதோர் பாரம்பரியம் உண்டு. நாமறிந்த வரையில் 19ஆம் நூற்றாண்டிலேயே ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் குழந்தைப்பாடல்களையாக்கத் தொடங்கி விட்டனர். 1935ஆம் ஆண்டு கல்வியதிகாரியாகப் பணியாற்றிய க.ச.அருணந்தி தொகுத்தளித்த 'பிள்ளைப்பாட்டு' என்னும் குழந்தைப்பாடத் தொகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தொகுதி பற்றித்தமிழ்நாட்டுக் குழந்தை இலக்கிய ஆய் வாளர்கள் விதந்து பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாலர், குழந்தை, சிறுவர், இளைஞர் முதலான வயதுநிலைப் படிமுறையைக் குழந்தை இலக்கிய கர்த்தாக்கள் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். உளவியல், சமூகவியல், மொழியியல், பண்பாட்டியல் முதலான துறைகள் வளர்ச்சியடைந்துள்ள இக்கால கட்டத்திலே குழந்தை இலக்கிய கர்த்தாக்கள் இவற்றை மனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இலக்கியம் படைக்கவேண்டிய கடப்பாட்டிற்கு உரிய வர்கள்.

செல்லையா குமாரசாமி அவர்களின் 'மாங்கனி' என்ற சிறுவர் பாடல் தொகுதி இப்போது வெளிவருகின்றது. நாவல், சிறுகதை முதலியவற்றை ஏலவே எழுதிய திரு. குமாரசாமியின் கவிதைத் தொகுப்பொன்றும் அண்மையிலே வெளிவந்துள்ளது. அக்கவிதைத் தொகுப்பினூடு இவரது கவித்துவ ஆற்றலைக் கண்டு கொள்ளலாம்.

பாலர், குழந்தை என்ற வயதுநிலைகளைக் கடந்து சிறுவர் என்ற பருவநிலையினை மனங்கொண்டே பெரும்பாலும் இப் பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறுவர்களுக்கு ஏற்புடைத்தான, அறிமுகமான, பரிச்சயமான சொற்கள், சொற்றொடர்கள், உவமை முதலானவற்றையே சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள் கையாளவேண்டும். இது நியதி அல்ல. நிர்ப்பந்தம்.

கவிஞர் குமாரசாமி இவற்றை ஓரளவுக்கு மனங்கொண்டு உள்ளார் என்பதை மாங்கனித்தொகுதி மூலம் கண்டு கொள்ள முடிகின்றது.

> ''பறவைகள் எழுந்து பறக்குது
> பால்தரப் பசுவும் அழைக்குது
> உறவைக் காகம் சேர்க்குது
> உறக்கம் போதும் எழுந்திடு''

இத்தகையபாடல்கள் சிறுவர்களைக் கவரும் தன்மை யுடையவை.

பெரும்பாலான சிறுவர் பாடல் தொகுதிகளிலே தாயைப் பற்றிய பாடல்கள் (அம்மா) இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை தாயுடன் நெருங்கி வாழும் காலப்பகுதியிலே 'அம்மா'ப் பாடல்கள் மூலம் முக்கியத்துவம் பெறுவது இயல்பானதே. வித்துவான் வேந்தனாரின் 'அம்மா' பாடல் இன்றுவரை நின்று நிலைப்பதை அவதானிக்க முடிகின்றது.

மாணவர்களின் கல்விப்பயன்பாட்டை மனங்கொண்டு (சிறுவர்) இவர் பாடிய பாடல்களும் இத்தொகுதியிலே இடம் பெற்றுள்ளன. நீதிபோதனை, கண்டுபிடிப்புக்கள், முக்கியமான உலோகவகைகள் முதலான பல விடயங்களைப்பற்றிக் கவிஞரும் பாடியுள்ளார்.

பாடலினூடு 'படிப்பு' உருவாக இத்தொகுப்பு உதவும் என நம்புகிறேன்.

கவிஞர் குமாரசாமி இன்னும் செழிப்பான சிறுவர் பாடல் களைப்பாடி எம்பிள்ளைகளுக்கு வழங்க வேண்டுமென விரும்பு கிறேன்.

பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா.
தலைவர்.
தமிழ்த்துறை.

16-08-2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஆக்கமலர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் மதிப்பிற்குரிய, நாவற்குழியூர் செல்லையா குமாரசாமி அவர்களின் ஆழ்மனச் சுவடுகளை மாங்கனி மூலம் சிறுவர் பாடல்களாக ஒப்புவித்திருக் கிறார். வாய்வழி மூலம் மூதாதையர்கள் கதை பாட்டுகளை தங்களுக்கேற்ப தாளநயங்களுடன் சொல்லி சிறுவர்களை சிந்திக்கத் தூண்டினார்கள். காலமாறுதல்களால் கதைகள் பாட்டுக்கள் காகிதங்களில் பதிந்துவந்தன. இச்சுவட்டு வடிவங்களில் நிலாபதிப்பகத்தின் மூலம் இக்கவிஞரும் தனது படைப்பிற்கு ஓர் அழகான பதிப்பை எதிர்காலச் சந்ததியினருக்காக எம் மழலைச் செல்வங்களின் கைகளில் உலாவர விடவேண்டுமென்ற அவரது எதிர்பார்ப்பை எனது நிறுவனத்தினால் நிவர்த்தி செய்வதையிட்டு மனநிறைவு அடைகின்றேன். இருந்தாலும் இனிமேல் தொடர்ந்து வரும் கணனி யுகத்தில் குறுவெட்டுக் களாகவும் இவரது படைப்பு களை வெளியீடு செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

அன்புடன்,
**ச.ரவிச்சந்திரன்** (எஸ்.ஆர்)
நிலா பதிப்பகம்.
இராஜவீதி,
கோப்பாய்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



ஏற்கனவே இரண்டு நாவல்களையும் கவிதைநூல் ஒன்றினையும் எழுதி வெளயிட்ட நான், சிறுவருக்கும் சில பாடல்களைப் பாடிப் பார்ப்போமே என எண்ணியதன் விளைவே இந்த `மாங்கனி`.

`மாங்கனி`யை பாடிய போதுதான் நான் புரிந்து கொண் டேன் சிறுவர் இலக்கியப்படைப்பு மிகமிகக் கடினமானது என்பதனை எத்தனை கவிதைகள் வேண்டுமானாலும் பாடிவிடலாம் - சிறுவருக்கு ஒரு பாடல் பாடுவதற்கிடையில் என்று தோன்றுகிறது.

சிறுவர் இலக்கியம் சிறுவருக்கு அறிவூட்டுவதாக ஆளு மையை வளர்ப்பதாக, புரிந்து கொள்ளக் கூடிய எளிய - பரிச்சியமான சொற்களைக் கொண்டதாக, கல்விப்பயன்பாடுடைய தாக அமைய வேண்டும் என நினைக்கிறேன்.

`மாங்கனி`யில் உள்ள பாடல்கள் எதுகை, மோனை, சந்தம் என்பன அமைந்து ஓசையுடன் பாடக் கூடியவையாகவும், பயன் உள்ளவையாகவும் இருக்கும் என நம்புகிறேன். படித்துப் பாடிப் பார்த்து பாடல்களின் `தரம்` பற்றி எனக்கு எழுதினால் நன்றி யுடையனவாக இருப்பேன் எனத் தெரிவித்து -

அணிந்துரை எழுதி வழங்குதற்கு தமிழ்த்துறை தலைவர், பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராசா அவர்களிடம் சென்ற போது இன்முகம்காட்டி வரவேற்று மிகக் குறுகிய காலத்தில் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினார்கள் அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மூலப்பிரதியோடு ஒப்புநோக்கி எழுத்துப் பிழைகள் திருத்தித் தந்த எனது புதல்விகள் கு.கோனலந்தேவி, கு.கோகிலா தேவி ஆகியோருக்கும் அச்சிட்டு வெளியிடும் நிலா பதிப்பகம் திரு.ச.இரவிச்சந்திரன் (S.R) அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகும்.

நாவற்குழி
கைதடி
09.09.2009

அன்பன்
**செல்லையா குமாரசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கு நேரம் ஆகுது.



எழுந்திடு மகனே எழுந்திடு
என்றன் செல்வா எழுந்திடு
பொழுது புலர்ந்தது எழுந்திடு
பூமி வெளுத்தது எழுந்திடு.

பூக்கள் இதழ்களை விரிக்குது
புன்னகைத்து அழகு காட்டுது
ஈக்கள் பறந்து வருகுது
இருந்து தேனை அருந்துது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

பறவைகள் எழுந்து பறக்குது
பால்தரப் பசுவும் அழைக்குது
உறவைக் காகம் சேர்க்குது
உறக்கம் போதும் எழுந்திடு.



குளித்து வந்து கைகளினை
கூப்பிக் கடவுளை வணங்கிடு
வெளுத்த ஆடை அணிந்திடு
சுவைத்து உணவை அருந்திடு.

பள்ளிக்கு நேரம் ஆகுது,
பையினில் புத்தகம் சேர்த்திடு
பள்ளம் வெள்ளம் பாதையிலே
பார்த்துப் பள்ளி ஏகிடு

ஆசான் சொல்லித் தருகின்ற
அனைத்தையும் மனதில் பதித்திடு
பாசாங்கின்றிப் படித்து வீடு
பள்ளி விட்டதும் சேர்ந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாக்கள்



கன்றை அழைத்து அம்மாப் பசு
பால் கொடுக்குது
கொண்டு வந்து காக்கை இரை
குஞ்சுக்கு ஊட்டுது.

"கொக் கொக்" கென்று கோழி அம்மா
குஞ்சை அழைக்குது
பக்கம் நின்று தீன் பொறுக்கப்
பார்த்து மகிழுது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி எலியை அம்மாப் பூனை
கொண்டு வருகுது
குட்டிப் பூனை மகிழ்ந்து அதனைக்
கடித்து உண்ணுது.

எலிகள் கூடக் குஞ்சை அணைத்துப்
பால் கொடுக்குது
புலிகள் நரிகள் வேட்டை ஆடி
பிள்ளை வளர்க்குது.

அம்மா போல அன்பு உள்ளோர்
யாரும் இல்லையே,
அம்மா போல தெய்வம் இல்லை
அதுவே உண்மையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி பிறந்தது

எங்களைத் தாங்கும் பூமி பிறந்தது
எப்படி என்பதை அறி தம்பி
பொங்கி எரிகின்ற சூரியன் விட்டுப்
பிரிந்து போனதோர் பொருள் தம்பி.

பிரிந்து சென்றபொருள் வான வெளியிலே
பெரிதாய் எரியும் சூரியனை
விரைந்து விரைந்து சுற்ற நெடுங்காலம்
வெப்பமும் மெல்லெனத் தணிந்ததடா.

அறுபது ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து
அல்லும் பகலும் மழை கொட்ட
இறுக்கம் கண்டது பிரிந்த பொருள்
இருண்ட பெரும் கடல் சூழ்ந்ததடா.

இன்று இருப்பது போல வெவ்வேறாய்
இருந்த தில்லையே கண்டங்கள்
ஒன்றே ஒன்று நிலப்பரப்பு, அதிலே
உயர் நீள் மலைகள் இருந்ததடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

நூற்று ஐம்பது கோடி ஆண்டுகள்
நீண்டு கழிந்து மறைந்திட ஓர்
மாற்றம் நேர்ந்தது, உப்புக் கடலில்
உயிர் அணு தோற்றம் கண்டதடா.

முதலில் தோற்றம் கடல் பாசியென
மூத்த விஞ்ஞானிகள் கொள்கை தம்பி
அதனைத் தொடர்ந்து ஓரணு ஈரணு
உயிர்கள் அசைவு கொண்டதடா.


காலம் கரைந்து சென்றிடவே, நீர்
நிலத்தில் வாழும் உயிர் இனங்கள்
வாலுடை பல்லி, பாம்பு, தவளை
போன்றன தோன்றி வாழ்ந்தனவே.

படிப்படியாய் பல உயிரினங்கள் இந்தப்
பாரினில் தோன்றின; குரங்கு இனமே
அடிப்படை மனிதர் தோன்றலுக்கு என்பது
அறிஞர் டார்வின் முடிவு தம்பி.

இன்று இந்தப் பூமியின் வயது
என்ன என்பதை நாம் அறிய
சொன்னார் ஆராய்ந்(து) அறிந்தோர் நானூற்று
ஐம்பது கோடி ஆண்டென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# முதன்மைகள்

உலகில் உள்ள மலைகளில் - மிகவும்
உயர்ந்தது **இமய மலை** தம்பி
அலைதரு கடல்களில் பெரியதுவும் - மிக
ஆழமானதும் **பசுபிக** தான்.


நதிகளில் நீண்டது **நைல்நதியே** — எகிப்து
நாட்டிற்கு வாய்த்த பெருநிதியே
மதில்களில் **சீனப் பெருஞ்சுவரே** — மக்கள்
தொகையிலும் **சீனா** முதலிடமே.

எவரெஸ்ட் முதலில் எட்டியுமே — புகழ்
ஈட்டினர் **டென்சிங், கிலாரியுமே**
புவியின் வடக்குத் துருவத்தை — முதலில்
**ரபேட்பியர்** சென்று அடைந்தாரே.

**சிறுத்தைப்** புலிதான் விலங்குகளில் - அதி
வேகம் கொண்டது ஓடுவதில்
பறவை இனத்தில் **கம்மிங்** - குட்டியை
பையில் சுமக்கும் **கங்காரு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10**

சந்திர மண்டலம் மீதிலிறங்கி – முதல்
சாதனை படைத்தவர் **நீல் ஆம்ஸ்ட்ராங்**
இந்திய நாடு கடல்வழியாக – வந்தவர்
**வாஸ் கொட காமாவே.**

உலகில் உயர்ந்த விலங்கென்றால் - அது
**ஒட்டகச் சிவிங்கி** ஒன்றேதான்.
விலங்கில் பெரியது **ஆபிரிக்க** – இருள்
வனத்தில் வாழும் **யானைகளே.**


அதிக வெப்பம் காணுமிடம் -• நாம்
அறிவோம் **அஜிஜி யா** என்று
அதிக மழையை கொட்டுமிடம் - இந்த
அகிலம் கண்டது **சிரப்பஞ்சி.**

நூலகங்களில் ·மிகவும் பெரியது – தம்பி
**தேசிய கியூ நூ** லகமாமே.
பாலை வனங்களிலே பெரிது – தம்பி
**ஸஹாரா பாலைவனம்** பேரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# வெற்றிக்கொடி நாட்டு



வெற்றி பெற்று, வெற்றி பெற்று
வெற்றிக் கொடி நாட்டு
கற்று உயர்ந்துன் நாட்டு மக்கள்
களித்துவாழ வழி காட்டு.

கல்வியில் சிறந்த செல்வம் இல்லை
கருதிக் கவனம் கொள்ளு
கொல்லுமாப் போல் வறுமை வரினும்
கல்விக் கூடம் செல்லு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைகள் உன்னைத் துரத்தி வந்தாலும்
தொடர்ந்துன் வழியில் முன்னேறு
"எல்லை வரைநான் போவேன்" என்னும்
எண்ணம் தருமே நற்பேறு!

ஒழுக்கம் கெட்டுப் போனால் வாழவில்
உயர்ந்தும் புகழே சேராது
அழுக்கிலே கனிகள் விழுந்தால் யாரும்
எடுத்துச் சுவைக்க நேராது.

கெட்ட பெயரை எடுத்தால் பொன்பல
கோடிகள் சேர்த்தும் மாறாது
எட்டுத் திக்கும் 'நல்லவன்' என்ற
எழும் புகழென்றும் வீழாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தியில் முதலிடம்



கம்பள உற்பத்தி தன்னில் முன்னணி **ஈரானே**
காப்பியில உலகை கவர்வது **பிரேசில்** நாடாமே
**தங்கம்** அள்ளித் தருவதில் **தென் ஆபிரிக்காவே**
**தாமிரம்** அதனில் தலை நிமிர்வது **சிலி**யாமே!


**வெள்ளியில்** முதலிடம் வகிப்பது **மெக்சிக்கோ**, இன்று
வேண்டிய **தகரம் ரப்பர மலேசியா** நாடொன்று
உள்ளம் மகிழ்ந்திட உண்ணும் **திராட்சை பிரான்சு**,என்றும்
உயர்ந்தது **சணலில் பங்களாதேஸ்** என உரைப்போமே!

அரிசி, **தேயிலை**, பட்டு உற்பத்தியில் உலகினிலே
ஆர்வம் காட்டி முன்னே நிற்பது **சீனாவே**,
எரிகரி, **இரும்புத் தாதுபிளாஸ்ரிக், பெற்றோலில்**
**அலுமினியத்தில்** ஏற்றம **அமெரிக்க** நாடாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணும் நீர்



உருண்டையான பூமி இதிலே
இரண்டு பங்கு கடலடா
மரங்கொள் காடு மலையும் பிறவும்
மண்ணும் சேர்ந்தோர் பங்கடா.

உலகில் தொண்ணூற் ஏழுசதமும்
கடலில் உள்ள நீரடா
அலைகள் ஆடும் கடலில் காணும்
அனைத்து நீரும் உப்படா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சியுள்ள மூன்று சதத்தில்
ஒன்று பனி மலையடா
கெஞ்சினாலும் கிடைக்கா ஒன்று
கீழ் நிலத்து நீரடா.

கண்டு கொள்நீ மீந்திருப்பது
நூற்றுக் ஒன்றே தானடா
ஒன்று அந்த வீதநீரே
மண்வாழ் உயிர்கள் பங்கடா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடு கிடைக்கும்

உன்றன் உயர்வு உன்றன் கையில்
என்றே எழுந்து நில்லடா
உன்றன் வளர்ச்சி பிறரால் அல்ல
என்றே உணர்ந்து செல்லடா.

கொடிகள் பாரு தடிகள் தேடி
தாமே தாவிப் படரும்,
கொடிய பாம்பின் குட்டி, ஆமை
பொரித்ததும் தம்மைக் காக்கும்.

தம்மைத் தாமே வளர்த்துக் கொண்ட
தலைவர் சரிதம் பாரடா
அம்மிக் கல்லாய் அசையாதிருந்து
உயர்வு கண்டோர் யாரடா?

தேடித் தேடி ஓடிப்பார் நீ
தேடுவது உன்னைச் சேரும்
கூடு கட்டும் தூக்கணாங், சிறு
குருவியைப் பார் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுகள் பாய வழிகள் யாரும்
அமைத்துத் தந்தது அறிந்தாயா?
ஏறி எவரெஸ்ட் சிகரம் அடைய
ஏணி எடுத்துக் கொடுத்தாயா?

என்னால் எதையும் சாதிக்க முடியும்
என்பதை மனதில் எழுதடா
தன்னம்பிக்கை தலைவனும் ஆக்கும்
தவறியும் வராது பழுதடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் உண்டு உன்னிடம்

ஓடடா தம்பி ஓடடா – வாழ்வின்
உச்சத்தை நோக்கியே ஓடடா
தேடடா தம்பி தேடடா – ஆற்றல்
உன்னிடம் உண்டதைத் தேடடா.

எண்ணத்தை நாளும் உயர்த்தடா – உயர
எண்ணங்கள் ஏணியென் றெண்ணடா
தண்ணீர் உயர்ந்திடத் தாமரை – உயரும்
தன்மையை நேரிலே பாரடா.

"என்னிடம் இல்லை யேதுமே" – என
எண்ணுதலே பெருந் தீமையே
அன்னை வயிற்றிலே தோன்றினாய் - உடல்
கோடிக்கு மேல்விலை போகுமே.


சின்ன விளம்பரம் செய்துபார் - சிறு
நீரகம் ஒன்றினை விற்பதாய்
பொன்னொடு வந்து நிற்பார்களே – அதை
பெற்றிடவே பல பேர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எத்தனை லட்சங்கள் - கொண்ட
உடல் ஒன்றிருக்கையில் தம்பி நீ
தப்படா இல்லையென்று இருப்பது – ஓடத்
தட்டடா உள்ளக் குதிரையை.

உள்ளக் குதிரை மீ தேறடா - தம்பி
ஊர் உலகைச் சுற்றிப் பாரடா
பள்ளங்கள் மேடுகண் டஞ்சாதே - எண்ணம்
ஈடேறும் வரையும் துஞ்சாதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்து வாழ்வோம்



சிரித்து வாழ்வோம் சிரித்து வாழ்வோம்
சிரித்து வாழ்வோம் தம்பி
சிரித்து வாழ்வோர் வாழ்வு என்றும்
சிறக்கும் என்பதை நம்பி.

சிரித்துச் சிரித்துப் பேசிப் பாரு
சேரும் பெரிதாய்க் கூட்டம்
விரிந்து சிரிக்கும் மலர்களை நாடி
விரையும் ஈக்கள் கூட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை சிரிக்கும் போது பாரு
அழகு அங்கே சொரியும்
அழகைச் சிரிப்பு உயர்த்தும் என்பது
அப்போது உனக்குப் புரியும்.

"வாயின் சிரிப்பு நோயைப் போக்கும்"
வையகம் கண்ட உண்மை
தாயின் சிரிப்பிற்கு உண்டு கருவை
சிறப்பாய் வளர்க்கும் தன்மை.

சிரித்து வாழத் தெரிந்து கொண்டால்
சிதறிப் போகும் துன்பம்
சிரித்த முகமும் தேன்போல் பேச்சும்
தேடித் தருமே இன்பம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைக் கல்வி



"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"
இன்றே இதனை மனதில் இருத்து
வளர வளரவுன் கல்வியை உயர்த்து
வளம்பெறும் வாழ்வு சிறகு விரித்து.

கல்வியைப் போலுயர் செல்வமும் ஏது?
கல்விமானை விட உயர்ந்தவர் யாரு?
வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும்
வல்லமை பெற்றவர் வாழ்வில்தேன் ஓடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

கற்றவர் சபைதனில் முன்னிரு சென்று
பெற்றவர் களிக்கட்டும் கண்டுஅதை நின்று
சுற்றம் துணையுனை சூழட்டும் கூடி
செழுமதி போல்புகழ் வளரட்டும் தேடி.

பெற்றவர் சுற்றம் பின் ஊருக்குதவு
புகழினை நோக்கித் திறக்கும் கதவு
நற்றவ வானாயுன் நாட்டிற்கு உதவு
நாடு நலம்பெறில் உலகுக்கு உதவு.

கையுறை கேட்டு காற்று வீசாது
காசெதிர் பார்த்து ஆறு பாயாது
வெயிலோ மழையோ பயன் கருதாது
வேதனை வரினும் நன்மைகள் செய்திடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் படிப்போம்



குறள் படிப்போம் திருக்குறள் படிப்போம் -திரு
வள்ளுவனாரின் குறள் படிப்போம்
அறம் பொருள் இன்பம் முப்பாலும் - திருக்
குறளிடை உண்டு, அவை படிப்போம்.

தெய்வப் புலவர் எம் வள்ளுவனார் - முழுத்
தேசமும் போற்றும் பெரும் புலவர்
செய்து தந்த நற் திருக்குறளை - நாமே
தினம் தினம் படித்து உயர்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரி வெண்பாப் பாட்டு இவைகள் - படிக்க
இன்பம் தருவன தாம் இவைகள்
கருத்தினில் கடல் என இருப்பவைகள் - எக்
காலமும் வான் என நிலைப்பவைகள்.

தமிழுக்குப் பெருமை தேடும் குறள் - பல
மொழிகளில் பெயர்வு கண்ட குறள்
அமிழ்தினுக்கு இணையாய் உள்ளகுறள்-இதை
அனைவரும் படிப்போம் அனுதினமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைப்பிடிக்க வேண்டியவை

பசி இல்லாமல் புசியாதே
பழைய உணவு கொள்ளாதே
நிசியில் வயிற்றை நிரப்பாதே
நீரைச் சுருக்கி அருந்தாதே.

கீரை வகையை தள்ளாதே
கொழுப்பை அதிகம் கொள்ளாதே
பாரம் ஏற உண்ணாதே
பகலில் தூங்க எண்ணாதே.

பொய் ஒருபோதும் பேசாதே
பெரியாரை மதிக்க கூசாதே
செய்த தவறை மறைக்காதே
சிறிய உயிரையும் வதைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிதடி சண்டைகள் செய்யாதே
யாரையும் என்றும் வையாதே
கொடியவரை நட்புக் கொள்ளாதே
கோபத்திற்கு இடமே கொடுக்காதே.

வீதியில் விற்பதை உண்ணாதே
விளையாட்டிற் குமே திருடாதே
நீதிக்கு மாறாய்ப் பேசாதே
நேர்மையை விட்டு விலகாதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி விளையாடுவோம்



ஆலயத்து வீதியிலே
ஆலமரம் ஒன்று
நாலுபக்கம் கிளை விரித்து
நிற்கிறது அங்கு.

ஆலமர நிழலினிற்கு
பாலர்களே போவோம்
மாலைவேளை நாங்கள் கூடி
பந்தடித்து மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவிளை யாடுவது
உடலை வலுவாக்கும்
கூடுமிரத்தக் கழிவை எல்லாம்
வேர்வை ஆக்கிப் போக்கும.

சேர்ந்து விளை யாடுகையில்
நண்பர்களே ஆவோம்
சோர்ந்து வீட்டில் படுத்திருந்தால்
தனிமையாகிப் போவோம்.

வெட்ட வெளியினிலே
வீசும் நல்லகாற்று
பட்டங்களை விட்டு நாங்கள்
பார்த்து மகிழ்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வேலையை இன்றே முடிப்போம்



நாளை நாளை என்று
நாளைக் கடத்தினால்
வாழ்வில் வளர்ச்சி
வராது தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய வேலையை
அன்றே முடிப்பதாய்
இன்றே உறுதி கொள்
சின்னத் தம்பி.

ஆறிய கஞ்சி
பழைய கஞ்சியென்று
கூறிய கூற்றினைப்
போற்று தம்பி.

"காற்றுள்ள போதிலே
தூற்றிடுவோம்" என்னும்
கூற்றினை ஏற்றிடு
செல்லத் தம்பி.

போன பொழுதென்றும்
திரும்பி வராதென்று
ஆணித் தரமாக
நம்பு தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொஞ்சம் கேளுங்கள்

பள்ளியிலே கற்கும் பிள்ளைகளே - நான்
சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்களே- நான்
சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்களே.

மாரி மழைகாலம் வீதிப் பள்ளங்களில்
வெள்ளமும் தங்கியே நிற்பதுண்டு - அந்த
நீரில் இறங்கினால் பாதம் இரண்டிலும்
நீர்ச்சிரங்கு பற்றும், துன்பமுண்டு.

ஓடிவரும் மோட்டார் வண்டியின் வேகத்தில்
பள்ளத்து வெள்ளங்க ளும்சிதறும் - உங்கள்
ஆடை நனையா திருந்திட வீதியின்
ஓரத்தில் போதலே நன்று என்றும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை கடக்கின்ற வேளை வரும்போது
பார்வையை வீதியில் பாய்ச்சிடுவீர் - உங்கள்
காதினில் வாகனச் சத்தம் விழுமுன்னே
காலடி வந்திடும் ஏங்கிடுவீர்.

வீதியின் ஓரத்தே மாமரங்கள் புளி
வேலியில் கொய்யாவும் காய்த்திருக்கும் - உண்ண
மோதிடும் ஆசைக் கிடம்கொடுத்தால் பெரும்
ஆபத்திலே உம்மை மாட்டிவைக்கும்.

பாடங்களை ஆசான் எப்போதும் மனதில்
படிந்திடும் படி தானுரைப்பார் - அப்போது
ஓடித்திரிந்திட விட்டால் மனதை அங்கு
உட்கார்ந் திருப்பதில் அர்த்தமில்லை.

கல்விக் கூடத்தில் உங்கள் கவனங்கள்
கற்பதில் மட்டும் இருக்கட்டுமே - குரு
சொல்லிச் தருகின்ற அத்தனையும், நெஞ்சினில்
கல்லில் எழுத்தாய் நிலைக்கட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை

பசியெடுத்த ஆலாப் பறவை
பறந்து திரிந்தது
புசிக்க இரை தேடித் தேடி
அலைந்து திரிந்தது.

நீலக் கடலின் மேலே பறந்து
கீழே பார்த்தது
ஆழக் கடலில் சிறிய மீனை
வெறுத்து அலைந்தது.

பெரிய மீனைத் தேடி தேடி
மேலும் பறந்தது
தெரிந்த பெரிய மீனைக் காலால்
கவ்விக் கொண்டது.

பிடித்த அந்த மீனை ஆலா
தூக்க முடியலை
நெடிய மீனை விட்டுக் காலும்
எடுக்கத் தெரியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கீழே கீழே கீழே கீழே
மீன் இழுத்தது
ஆழ நீருள் சென்ற ஆலா
அங்கே மாண்டது.

அளவுக் கதிக ஆசை யார்க்கும்
அழிவுதான் என்று
விளங்கிக் கொண்டு நாங்கள் என்றும்
வாழ்வதே நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரை பேசுகிறது



நாடுவிட்டுப் பல நாடு கடந்துங்கள்
நாட்டிற்கு நாங்களும் வந்தோமையா
கூடிப் பெரும்பெரும் கூட்டங்களாய் மலை
குன்று கடல் தாண்டி வந்தோமையா.

ஆயிரம் கல் நாம் பறந்தோமையா
ஆறாமல் அமராமல் பறந்தோமையா
ஞாயிறு உறங்கும் வேளையிலும் கூட
நாமுறங் காமல் விரைந்தோமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரி பொழிந்திடும் காலத்திலே உங்கள்
மண்ணிலே தண்ணீர் பெருக்கமையா
நீரில்வளர் காடு மெத்தவுண்டு, முட்டை
இட்டடை காக்கும் வளங்களுண்டு.

கொஞ்சிக் குலாவிக் குடும்பம் பெருக்கி
கோடையில் திரும்பிப் போவோமையா
சஞ்சலம் தந்திடும் செய்தியொன்று எமைச்
சாப்பிடக் கொல்வோரும் இங்கேயுண்டு.

உங்கள் நாட்டிற்கு வந்திடும் எங்களின்
உயிர் பறித்திடல் நன்றோ ஐயா
உங்கள் புலவர் தூது உரைத்ததும்
எங்கள் முன்னோ ரிடம் தானேஐயா.

நீரில் மிதந்து குற்றிகளில் நின்று
நாங்கள் மீன்கள் பிடிக்க முன்னோர்
நேரிலே கண்டே கட்டுமரம் கட்டி
கப்பலும் ஓட்டிக் கற்றீரஐயா

பெரிய மீனொன்று வந்திடு வரையும்
பொறுமை யாகவே நிற்போமையா
உரிய காலம் வந்திடில் நீங்களும்
உடன் செயல்பட வேண்டுமையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைக்கு நன்றி



திருட்டுக் குணமுடை(ய) காக்கைகளும் நாட்டில்
தேவை என்பது தெரியோணும்
விரட்டி அவற்றைக் கலைப்பதனால் நலம்
வீணாகிப் போகும் புரியோணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து கிடக்கும் எலி போன்றனவால்
எமக்கு நோய்கள் வருவதுண்டு
பறந்து திரிந்து காக்கைகள் அவற்றை
பகிர்ந்து உண்பதனால் நன்மையுண்டு.

வீட்டிற்கு வீடு வீசி எறிந்திடும்
உணவுக் கழிவுகளும் வேறு
நாற்ற மடிப்பன வற்றையுமுண்டு நோய்
நாட்டில் பெருகாது தடுக்கிறது.

யாரும் அழையாது கூலியும் வாங்காது
நாளும் தவறாமலே வந்து
ஊருக்குள் சேரும் அழுக்கினை உண்ணும்
காக்கைக்கு எங்கள் நன்றியுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் வருகுது.

பொங்கல் வருகுது பொங்கல் வருகுது
பொங்கல் வருகுது தங்கையே - தைப்
பொங்கல் வருகுது தங்கையே.
(பொங்கல்...)


முற்றிய அரிவி வெட்டிக் கொணர்ந்து
குற்றிப் புடைத்து அரிசி எடுத்து
முற்றம் மெழுகி அடுப்புகள் வைத்து
பற்றுடன் பொங்கிநாம் பொங்கல் படைக்க -
(பொங்கல்...)

தோட்டத்து வாழைக் குலைக ளறுத்து
வீட்டுப் புறத்து விளாம்பழம் ஆய்ந்து
பாட்டி வளவுப் பலாக்கனி வெட்டி
நீட்டுக் கரும்பொடு சேர்த்துப் படைக்க -
(பொங்கல்...)

கோலங்கள் போட்டு கும்பமும் வைத்து
நாலு புறத்துமே நெய் விளக்கேற்றி
பாலெடுத்து அம்மா பானை நிரப்ப
மூலையில் சாணத்தால் சாமியும் வைக்க -
(பொங்கல்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிப் பாலிலே இட்ட அரிசியில்
கட்டிவெல்லம் தேன் நெய்யும் கலக்க
பட்டொளி வீசிப் பகலவன் பார்க்க
தொட்டுத் தழுவி தென்றலும் வீச -
(பொங்கல்...)

செந்நெல் விளைந்திட நன்மைகள் செய்த
செங்கதி ரோனுக்கு நன்றிகள் சொல்ல
துன்பங்கள் போய்நல்ல இன்பங்கள் பொங்க
அன்பினில் நீந்தி அனைவரும் வாழ -
(பொங்கல்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசும் காற்றே

காற்றே! காற்றே! வீசும் காற்றே!
கொஞ்சம் இங்கே நில்லு - உன்
தோற்றம் என்ன என்பதை எமக்குச்
சொல்லித் தந்து செல்லு.



கண்ணால் உன்னை இற்றை வரையும்
கண்டார் யாரும் இல்லை - நீ
பெண்ணா ஆணா என்று எமக்குச்
சொன்னார் தானும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலாய் நீ வீசும் வேளை
தேகம் கொள்ளும் இதமே - நீயே
கொண்டலாக மாறி வந்தால்
கொடுமை; மனதில் பயமே.

ஒருசில கணமே உறங்கி விட்டாலும்
உயிர்கள் எல்லாம் மடியும் - நீ
பரவிய கடலைத் தள்ளி வந்தாலும்
பாரே உன்னால் அழியும்.

நல்லன செய்யும் நீ சிலவேளை
நம்மேல் கோபம் கொண்டா - மிகப்
பொல்லாக் கொடுமை செய்கின்றாய் ஏன்
புரியச் சொல்லிச் செல்வாய்.

ஆவி ஆகும் நீரை நாளும்
காவிச் சென்று மேலே - எம்
தேவைக்கு எல்லாம் மழையாய் மாற்றி
பெய்விக் கின்றாய் கீழே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகணம் நீயே நாசிக்கு இதமாய்
நறுமணம் கொண்டு வருவாய் - நீ
மறுகணம் குமட்டும் துர் நாற்றத்தை
மனம் வருந்தவும் தருவாய்.

இன்னிசை ஏந்தி வந்தே காதில்
இன்பம் ஊட்டும் நீதான் - சில
துன்பக் குரல்களும் தூக்கியே வந்து
துவளச் செய்வதும் ஏன்தான்?

கோபம் கொண்டு சுழன்று சுழன்று
கூரைகள் தகர்த்தி வீசுகிறாய் - மிக
வேகம் கொண்டு பயன்தரு மரங்களை
வீழ்த்தி ஏழைகள் ஆக்குகிறாய்.

காற்றே! காற்றே! நீ நுழையாத
இடமே திந்த மண்மேல் - சீறிக்
கூற்றாய் மாறும் கொடுமை யாவும்
விட்டால் என்ன இனிமேல்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்



சத்தியம் கடைப்பிடி தம்பிப்பாப்பா - என்றும்
சஞ்சலமே வாராது தம்பிப்பாப்பா
உத்தமன் என்று ஊருரைக்கும் தம்பிப்பாப்பா
உண்மையிது நன்மையடா தம்பிப்பாப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரா நாடகத்தை தம்பிப்பாப்பா
அண்ணல் காந்தி பார்த்ததனால் தம்பிப்பாப்பா
புரிந்துணர்ந்து சத்தியத்தை தம்பிப்பாப்பா
புனிதராக வாழ்ந்தாரே தம்பிப்பாப்பா.


காந்தித் தாத்தா சரிதத்தை தம்பிப்பாப்பா
கருதிப் படித்துப் பார் தம்பிப்பாப்பா
மாந்தருள்ளே தெய்வமாக தம்பிப்பாப்பா
வாழ்ந்த தறிந்திடலாம் தம்பிப்பாப்பா.

கூழாங்கல் கோடி சேர்ந்தும் தம்பிப்பாப்பா
குறுவைரம் ஒன்றாகுமோ தம்பிப்பாப்பா?
நாளாந்தம் பொய்யுரைத்தும் தம்பிப்பாப்பா
நன்மையில்லை உண்மைமுன்னே தம்பிப்பாப்பா.

சத்தியமே வெற்றி பெறும் தம்பிப்பாப்பா
சாவிதற்கு என்றுமில்லை தம்பிப்பாப்பா
புத்தர் யேசு நபிசரிதம் தம்பிப்பாப்பா
நன்கு அறிந்துகொள்ளுவாய் தம்பிப்பாப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிப்பிள்ளை



கிளிப் பிள்ளையே! கிளிப் பிள்ளையே!
கிட்ட வருவியா - தமிழ்
மொழியில் பாட்டுச் சொல்லித் தருவேன்
மடியில் வருவியா?

கொய்யாப் பழம் கொண்டு தருவேன்
கொத்தித் தின்னலாம் - என்
கையால் உணவு ஊட்டி விடுவேன்
சுவைத்து உண்ணலாம்.

தங்கைப் பாப்பா கைகால் ஆட்டிச்
சிரிக்கப் பார்க்கலாம் - என்
தங்கை ஆடும் தொட்டில் இருந்து
நீயும் ஆடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுக் குட்டி மீதில் இருந்து
வீட்டைச் சுற்றலாம் - எங்கள்
மாட்டின் முதுகில் அமர்ந்து கொண்டு
ஊரைப் பார்க்கலாம்.

கூட்டில் உன்னை அடைக்க மாட்டேன்
வீட்டில் திரியலாம் - அயல்
காட்டில் பறந்து திரும்பி வந்தென்
அருகில் இருக்கலாம்.

பட்டுப் போன்ற உன் இறகும்
பவளம் போற் சொண்டும் - நான்
தொட்டுத் தடவ ஆசை கொண்டேன்
கிட்ட வந்திடு.

கொஞ்சிக் கொஞ்சிப் பேசி உன்றன்
கூடவே இருப்பேன் - நீ
அஞ்சிடாதே பறந்து என்றன்
அருகில் வந்திடு.

மனதுக் கினிய வாழைத் தோட்டம்
எமக் கிருக்குது - பழம்
தினமும் உனக்கு தின்னத் தருவேன்
மடிக்கு வந்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு போல......



எறும்பு போலச் சுறுசுறுப்பாய் நீ
செயற்பட வேண்டுமடா - அடிக்
கரும்பு போல உன்றன் பேச்சில்
இனிமையும் வேண்டுமடா.

பெற்றவர் சொல்வதில் பிழை இருக்காது
புரிந்திட வேண்டுமடா - நாலும்
கற்றவரோ டுறவாடி உலகியல்
கற்றிட வேண்டுமடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லார்க்கு இயன்றது கல்லார்க்கு கற்றதை
ஈந்திட வேண்டுமடா - தம்பி
பொல்லார் உறவுகள் பொன்னாகத் தோன்றிடும்
பொல்லாங்கில் முடியுமடா.

இளமைக் காலம் கற்கும் காலம்
இழந்திடல் மடமையடா - எங்கள்
பழைமை மூடப் பழக்க வழக்கத்தை
அழித்தலுன் கடமையடா.

அலையெனத் தோல்விகள் அடுத்து வந்தாலும்
அஞ்சுதல் ஆகாதடா - என்றும்
மலைஎன உறுதி மனத்திடை கொண்டு
நிலைத்திட வேண்டுமடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பெருமை

அன்பாய் என்றும் எல்லோருடனும்
பழகிட வேண்டும் பிள்ளைகளே
'அன்பே தெய்வம்' என்பர் அறிஞர்
அறிந்து கொள்ளுவோம் பிள்ளைகளே.

பெற்றவர் தமது பிள்ளைகள் மேலே
அன்பு கொள்வது போலே
மற்றவர் இடத்தும் சிற்றுயிர் இடத்தும்
அன்பாய் இருப்போம் பிள்ளைகளே.

கோபம் கொடியது அன்பைத் தின்று
அழிவை வளர்க்கும் பிள்ளைகளே
நாகம் எனவே சீறும் மனிதர்க்கும்
நன்மைகள் செய்வோம் பிள்ளைகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தீமை எமக்கு இளைத்தாலும்
எவருக்கும் இன்னல் எண்ணாது
புத்தர் இயேசு காந்தி வழியினை
பின்பற்றி வாழ்வோம் பிள்ளைகளே.

அன்பின் பெருமை தன்னை எல்லோரும்
அறிந்தால் நன்கு பிள்ளைகளே
இன்பம் பொங்கும் இனிதே உயிர்கள்
என்றும் வாழும் உலகினிலே.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56

# பெற்றோரைக் காப்போம்



பொல்லுப் பிடித்துக் கொண்டு
மெல்ல நடை நடந்து
செல்லுகின்ற பாட்டியைப் பாருங்கோ -வீதியிலே
செல்லுகின்ற பாட்டியைப் பாருங்கோ.

ஐந்து பிள்ளை கொண்டவராம்
சொந்த வீடு கண்டவராம் - கண்ணீர்
சிந்தி நடப்பதைப் பாருங்கோ - கண்ணீர்
சிந்தி நடப்பதைப் பாருங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பிள்ளை ஐந்திருந்தும்
ஊண் இன்றியே வருந்தும்
கூன் விழுந்த பாட்டியைப் பாருங்கோ - முதுகு
கூன் விழுந்த பாட்டியைப் பாருங்கோ.

பெற்றெடுத்த பிள்ளை ஐந்தும்
சுற்றமுமே கை விரித்தால்
முற்றியது செல்வதெங்கே சொல்லுங்கோ - அந்த
முற்றியது செல்வதெங்கே சொல்லுங்கோ.

பத்துத் திங்களாய்ச் சுமந்து
நித்திரை மறந்து காத்த
உத்தமியாள் நாதியற்றுப் போகிறாள் - ஒரு
உத்தமியாள் நாதியற்றுப் போகிறாள்.

இந்த நிலை எம்மை ஈன்ற
தந்தை தாய்க்கு வந்திடாது
எந்தநாளும் காத்திடுதல் வேண்டுமே - தம்பி
எந்தநாளும் காத்திடுதல் வேண்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகந்தை



அழகி என்று றோசாவிற்கு
அகந்தை வந்தது
உலகு தன்னை மதிக்குதென்று
உவகை கொண்டது.

விரிந்த றோசா, வாடாமல்லி
மலரைப் பார்த்தது
சிரிப்பினோடு "நீயா நானா
அழகி?" என்றது.

மாங்கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழகு என்றும் நிலைப்பதில்லை
அறிந்திடு இன்று
அழகினுக்கு ஆபத் துண்டு
அறிந்திடு நின்று".

தேனை உண்ண வண்டிரண்டு
தேடிப் பறந்தது
வானைப் பார்த்த றோசாமீது
வந்து அமர்ந்தது.

இரண்டு மூன்று நாட்களிலே
இதழ்களைக் கொட்டி
நிரந்தரமாய் அழகிழந்து
நின்றது நெட்டி.

பார்த்திவற்றை நின்ற வேறு
பூ உரைத்தது
"யாரையுமே பகிடிக்கும் தான்
இகழக் கூடாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கனி



இனிக்கும் கனி இனிக்கும் கனி
எல்லோரும் விரும்பும் கனி - முக்
கனியுள் ஒரு கனியும் நானே
மாங்கனியே என்னுடைய பேரே.

என்சுவையில் வதைத் தேனும் நாணும்
இறைவனுக்கு என் சுவையும் வேணும்
தின்பதற்கு பறவைக் கூட்டம் கூடும்
தேசமெலாம் என் சுவையைப் பாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தை அகிலம் என்று
ஆனை முகன் சுற்றி வந்து
புன்னகைத்துப் பெற்ற கனி நானே
மாங்கனியே என்னுடைய பேரே.

உச்சையினி ஆண்ட மன்னன்
உலகம் எங்கும் உள்ள எல்லா
இச்சைகளைத் துறக்கச் செய்தோன் நானே
மாங்கனியே என்னுடைய பேரே.

காரைக்கால் அம்மை அந்நாள்
கைலாயம் செல்ல ஒரு
காரணமாய் இருந்ததுவும் நானே
மாங்கனியே என்னுடைய பேரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்து வேளையில்

பட்ட மரம் ஒன்றில்
பொந்து துளைத் தங்கே
முட்டைகள் இட்ட தோர்
பச்சைக் கிளி.

சின்னச் சின்ன பிள்ளை
நான்கு பொரித்ததும்
இன்பில் மிதந்தது
பச்சைக் கிளி.

காட்டில் சென்று இரை
தேடி நாளும் பிள்ளை
ஊட்டி வளர்த்தது
பச்சைக் கிளி

பிஞ்சுப் பிள்ளை தின்ன
வந்ததோர் பூனை கண்டு
அஞ்சி நடுங்கிற்றுப்
பச்சைக் கிளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்திலே தாவி
ஏறிய பூனை கண்டு
உரத்து அழுததப்
பச்சைக் கிளி.

அம்மாக் கிளியதன்
அவலக் குரல் கேட்டுக்
கம்புடன் வந்தானோர்
தம்பி ஓடி.


காட்டுப் பூனையை
தம்பி விரட்டவே
ஓட்டம் எடுத்தது
காட்டை அடைந்தது.


கலங்கும் வேளையில்
கைகொடுத்துக் காத்தல்
நலங்கள் யாவிலும்
நல்லது நண்பரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிதும் சிறிதும்





மதம்பிடித்த யானை ஒன்று
ஊருள் வந்தது
விதம் விதமாய் மனிதருக்கு
வம்பு செய்தது.

வீடுகளை பிடுங்கிக் கையால்
வீசி எறிந்தது
ஆடுமாடு அலறச் சிதற
அடித்துக் கொன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தென்னை மரங்களையும்
இழுத்துச் சாய்த்தது
பழுத்தபலா மா மரங்களை
முறித்து மாய்த்தது.

கட்டெறும்பு கண்டு இவற்றைக்
கவலை கொண்டது
சட்டென்று யானையின் துதிக்
கையுள் புகுந்தது.

துதிக் கையுள் இருந்தபடி
எறும்பு கடித்தது
அதனைத் தாங்க முடியாது
யானை துடித்தது.

வலி தாங்க முடியாது
பெரியயானை தன்
பொலிவான துதிக் கையை
மரத்தில் அடித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து அடித்து நோவெடுக்க
அழுது காட்டை அடைந்தது
கடித்த எறும்பு துதிக்கையினை
விட்டுவெளியே வந்தது.

சிறியதற்கும் வலிமை உண்டு
தெரிந்து கொள்ளுவோம்
சிறிய உளியும் பெரிய பாறை
பிளக்கும் அறிகுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு:
நிலா பதிப்பகம்.
077 3068761

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org